1981 ஜனவரி 24

156. தமிழ் நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 19—7—1975 ஆம் தேதியிடப் பெற்ற 1197 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) 304 (ஈ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்பிகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

இணைப்பு

[199 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 21க்கான விடையைக் காண்க.]

விடை ;

கடலோரப் பகுதியிலிருந்து மூன்று மைல் தொலைவுக்குள் கட்டுமர மீனவர்கள் மீன் பிடிக்க வேண்டுமென்றும், மூன்று மைல் தொலைவுக்கப்பால் விசைப்படகுக்காரர்கள் மீன்பிடிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்படுகிறது.

2. சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்ட கடற் பகுதிகளில் விசைப்படகுக்காரர்களுக்கும், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் தகராறு ஏற்பட்டு சட்ட ஒழுங்குப் பிரச்னை உண்டாகும் போது காவல் துறையினர் குறுக்கிட்டு அதைத் தவிர்க்கின்றனர்.

3. இதர மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்கள் மீன்துறை காவல் துறை அலுவலர்களையும், விசைப்படகுக்காரர்கள், நாட்டுப் படகுக்காரர்கள் பிரதிநிதிகளையும் அழைத்து, சமரச குழுக்களைக் கூட்டி அவ்வப்போது பிரச்னைகளை சுமூகமாக தீர்த்து வருகின்றனர்.

4. தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரு வாரத்தில் நாட்டுப்படகு மீனவர்கள் நான்கு நாட்களிலும், விசைப் படகுக்காரர்கள் மூன்று நாட்களிலும் இரவில் மீன் பிடிக்க மீன் துறையினரால் அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது.

5. தென்னாற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீன்பிடிக் காலங்களில் கடலில் தகராறுகள் ஏற்படுவதைத் தவிர்த்திட மீன் துறையினர் குறிப்பிட்ட முக்கிய இடங்களில் ரோந்து செய்கின்றனர்.